டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

agridoctor.in | 22.08.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 053 - Madurai | Online Edition

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

# திலாப்பியா மீன் உற்பத்தியாளர்களுடன் மத்திய மீன்வளத் துறை செயலாளர் உரையாடினார்

புது தில்லி, ஆக.21

பிரதமரின் மீன் வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட திலாப்பியா மீன் வளர்ப்புத் தொகுப்புக் குறித்த முன்னேற்றத்தை ஆய்வு செய்வதற்கான கலந்துரையாடல் சத்தீஸ்கர் மாநிலம் ராய்பூரில் 20.08.2026 அன்று நடைபெற்றது. இக்கூட்டம் மத்திய மீன்வளர்ப்புத் துறைச் செயலாளர் டாக்டர் அபிலாக்ஷ் லிகி தலைமையில் நடைபெற்றது. அப்போது கள அளவில் உள்ள குறைபாடுகள், சவால்களை அறிந்து கொள்ளும் வகையில் திலாப்பியா வகை மீன் வளர்ப்பாளர்கள், தொழில்முனைவோர்கள், ஏற்றுமதி யாளர்கள், இதர சம்மந்தப்பட்டோர்கள் ஆகியோருடன் அவர் உரையாடினார்.

இந்த கலந்துரையாடல் நேரடியாகவும், காணொளி வாயி லாகவும் நடைபெற்றது. இதில் 1,300-க்கும் மேற்பட்ட திலாப்பியா மீன் வளர்ப்பவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர். அப்போது பேசிய டாக்டர் அபிலாக்ஷ் லிகி, நாட்டின் மீன் வளத்துறையின் வளர்ச்சிக்கு திலாப்பியா மீன் வளர்ப்பவர்கள் முக்கியப் பங்காற்றியுள்ளதாகக் குறிப்பிட்டார். உலக அளவில் வர்த்தகத் தடைகள் இருந்தபோதிலும், இந்தியா 198 லட்சம் டன் மீன் உற்பத்தியில் ஈடுபட்டும், ரூ.73,890.46 கோடி மதிப்பிலான கடல் உணவுகளை ஏற்றுமதி செய்தும் சாதனைப் படைத்துள்ள தாக அவர் குறிப்பிட்டார்.



# முன்னிலை செயல் விளக்க திட்டத்தின் கீழ் புதிய ரக தீவன சோளம் விதைகள் வழங்கும் விழா



கள்ளக்குறிச்சி, ஆக.21

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் காளசமுத்திரம் கிராமத்தில் அமைந்துள்ள வேளாண் அறிவியல் நிலையத்தின் மூலம் திருக்கோவிலூர் ஒன்றியம் கூவனூர் கிராம விவசாயிகளுக்கு புதிய தீவனச் சோழ ரகமான சிஎஸ்வி 33 எம் எப் ரக விதைகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்விற்கு மணலூர் பேட்டை வேளாண் அறிவியல் குழு தலைவர் நாகேஸ்வரன் வரவேற்புரை ஆற்றினார். கள்ளக்குறிச்சி வேளாண் அறிவியல் நிலையத்தின் உழவியல் தொழில்நுட்ப வல்லுநர் மகேஸ்வரன் கலந்து கொண்டு தீவன சோள சாகுபடி முறைகளான நிலம் தயாரித்தல் விதை நேர்த்தி மற்றும் நடவு, ஒருங்கிணைந்த உர மேலாண்மை, களை மேலாண்மை நீர் மேலாண்மை மற்றும் பூச்சி மேலாண்மை முறைகள், அறுவடை மற்றும் தீவனத்தை பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார். மேலும் குறைந்த நிலம் மற்றும் நீர் ஆதாரத்தினை பயன்படுத்தி ஊட்டச்சத்து மிகுந்த தீவனங்களை வழங்குவதற்கு கலப்பு தீவன முறைகளை விவசாயிகள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் 10 சென்ட் தீவனப்பயிர் மாதிரி குறித்தும் விளக்கினார். மேலும் விவசாய நிலங்களில் பார்த்தீனிய களைச்செடிகளால் எவ்வாறு கால்நடைகளுக்கும் மனிதர்களுக்கும் தீங்கு ஏற்படுகிறது என்பது குறித்தும் ஒருங்கிணைந்த முறையில் பார்த்தீனியம் களையை எவ்வாறு மேலாண்மை செய்யலாம் என்றும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். இந்த நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக பூவனூர் விவசாயிகளுக்கு புதிய தீவன சோள ரகமான சி எஸ் வி 33 எம் எப் விதைகள் விதைகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியின் இறுதியாக விவசாய ஆர்வலர் குழு உறுப்பினர் மோகன் நன்றியுரை ஆற்றினார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# இயற்கை வேளாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி



ஈரோடு, ஆக.21

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் அட்மா திட்டத்தின் கீழ் அவல்பூந்துறை கிராமத்தில் உள் மாவட்ட அளவில் இயற்கை வேளாண்மை என்ற தலைப்பில் 40 விவசாயிகளுக்கு 21.08.26 அன்று பயிற்சி அளிக்கப்பட்டது. க.பிரசாத், வேளாண்மை உதவி இயக்குநர், மொடக்குறிச்சி, தலைமை தாங்கி பசுந்தாள் பயிர்களின் மூலம் மண்வளத்தை மேம்படுத்துதல் இரசாயன உரங்களின் பயன்பாடுகளை குறைத்து அங்கக உரங்களை பயன்படுத்துதல் மேலும் உயிர் உரங்களின் பயன்கள் பற்றியும் இதன் மூலம் மண்வளம் காக்கப்படும் என்பதை தெளிவாக எடுத்துரைத்தார். அரசப்பன், துணை வேளாண்மை இயக்குநர் (ஓய்வு), இயற்கை வேளாண்மை குறித்தும் இயற்கை வேளாண் இடுபொருட்கள் தயாரிக்கும் முறைகள் ( பஞ்சகாவ்யா, அமிர்தகரைசல், ஜுவாமிர்தம் மற்றும் மீன் அமிலம்) மற்றும் பயிர் சுழற்சி, பூச்சி, களை மேலாண்மை முறைகள் குறித்து தெளிவாக விளக்கினார். நந்தகுமார், துணை வேளாண்மை அலுவலர், மொடக்குறிச்சி வேளாண்மை உழவர் நலத்துறை மானியத் திட்டங்கள் மற்றும் நுண்ணீர் பாசனம் குறித்து விளக்கினார். அ.பிரதீப்குமார், வட்டார தொழில்நுட்ப மேலாளர், மொடக்குறிச்சி உழவு முறைகள், மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் அசோலா பயன்கள் பற்றி கூறினார். விஜயகுமார், உதவி தொழில்நுட்ப மேலாளர், உழவன் செயலி மற்றும் இநாம் குறித்தும் பதிவு செய்யும் முறைகள் மற்றும் விவசாய அடையாள எண் பதிவு செய்தல் குறித்து கூறினார். பொ.லட்சுமி, உதவி தொழில்நுட்ப மேலாளர், மொடக்குறிச்சி நன்றியுரை கூறினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**19. சிக்கன் கிளியர் சூப்**

**தேவையான பொருட்கள்**

சிக்கன் – 200 கிராம்

இஞ்சி – சிறிது

பூண்டு – 4 பல்

மிளகு

உப்பு

**செய்முறை**

சிக்கனை இஞ்சி, பூண்டுடன் நன்றாக வேக வைத்து வடிகட்டி மிளகு, உப்பு சேர்த்து பரிமாறவும்.

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

**நாளை தொடரும்...**



# அங்கக வேளாண்மை / இயற்கை இடுபொருட்கள் தயார் செய்தல் பற்றிய பயிற்சி



திருச்சி, ஆக.21

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டாரம், மணக்கால் கிழக்கு கிராமத்தில் அட்மா திட்டத்தில் அங்கக வேளாண்மை/ இயற்கை இடுபொருட்கள் தயார் செய்தல் பற்றிய விவசாயிகள் பயிற்சி திருச்சிராப்பள்ளி உழவர் பயிற்சி நிலையம் வேளாண்மை துணை இயக்குநர் ராஜசேகரன் தலைமையில் நடைபெற்றது.

ரசாயன உரங்கள் பயன்பாடு குறைத்தல், வரப்பு ஓரத்தில் பயறு வகை விதைப்பு, பசுந்தாள் உரம் அளிக்கும் தக்கைபூண்டு, சணப்பை விதைப்பு செய்தல், வயல்களில் பறவை தாங்கி அமைத்தல், சூரிய ஒளி விளக்கு பொறி வைத்து பூச்சிகள் கவர்ந்து அழித்தல் பற்றி விரிவாக விளக்கி கூறினார். உழவர் பயிற்சி நிலையம் வேளாண்மை அலுவலர் நாகராசன் பேசுவையில் வேளாண்மை இடுப்பொருட்கள் விற்பனை உரிமம் பெறும் வழிமுறைகள் பற்றி விரிவாக விளக்கி கூறினார். அதன் பின்பு புலு அந்தநல்லூர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் ஹரிகிருஷ்ணன் அங்கக இடுபொருட்கள் கீழ்கண்ட முறையில் தயார் செய்து விவசாயிகள் பயன்படுத்தியிட கேட்டுக்கொண்டார். ஜீவாமிர்தம் தயாரிப்பதற்கான தேவையான பொருட்கள் மற்றும் செய்முறை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**தேவையான பொருட்கள்**

மாட்டுச்சாணம் – 10 கிலோ, மாட்டு கோமியம் – 10 லிட்டர், வெல்லம் (அல்லது கரும்புச் சாறு – 4 லிட்டர்) – 2 கிலோ, தண்ணீர் – 200 லிட்டர், கடலை மாவு / தட்டைப்பயறு மாவு / உளுந்து மாவு – 2 கிலோ, ஈரமான மண் – 1 கைப்பிடி, பிளாஸ்டிக் டிரம் (200 லிட்டர் கொள்ளளவு) – 1 எண்ணம்

### செய்முறை

200 லிட்டர் தண்ணீரில் சாணம், கோமியம், வெல்லம் அல்லது கரும்புச் சாறு சேர்க்க வேண்டும்.அதனுடன் கடலைமாவு/தட்டைப்பயறு மாவு/உளுந்து மாவு மற்றும் ஈரமான மண் ஆகிய அனைத்தையும் சேர்க்க வேண்டும். இவற்றை பிளாஸ்டிக் பக்கெட்டில் (டிரம்மில்) சேர்த்து நன்றாக மூடி வைக்க வேண்டும். தினமும் காலை, மதியம், மாலை என மூன்று வேளைகளிலும் கடிகார முள் சுழற்சி முறைப்படி (clockwise) நன்றாகக் கலக்கிவிட வேண்டும். இரண்டு முதல் மூன்று நாளில் இந்த ஜீவாமிர்தக் கரைசல் தயாராகிவிடும். இதனை தயாரித்த ஒரு வாரத்திற்குள் பயன்படுத்த வேண்டும். இந்த கரைசலை எப்போதும் நிழலில் வைத்து பராமரிக்க வேண்டும். கரைசலை வடிகட்டி, ஒட்டும் திரவம் (காதி சோப் அல்லது ஆறிய அரிசிக்கஞ்சி) சேர்த்துப் பயன்படுத்தலாம்.

### பயன்படுத்தும் முறை

இலை வழி தெளிப்பாக எல்லா வகை பயிர்களுக்கும் ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் என்ற அளவில் பயன்படுத்தலாம். ஒரு லிட்டர் ஜீவாமிர்தத்தை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து இலை வழி தெளிப்பால் பயன்படுத்தலாம்.

### பயன்கள்

இரசாயன உரத்தால் மலடாகிய மண்ணிற்கு ஜீவாமிர்தம் ஒரு அருமருந்தாகும்.இதை மண்ணில் அளிப்பதால் மண்புழுக்கள் அதிகரிப்பதோடு நுண்ணுயிர்களைப் பெருக்கும்.பயிர்களுக்கு ஏற்படும் பூச்சி மற்றும் நோய் தாக்குதலைத் கட்டு படுத்தி மகசூல் அதிகம் பெறலாம் என கூறினார்.

பயிற்சிக்கான ஏற்பாட்டினை வேளாண்மை உதவி இயக்குனர் லால்குடி சத்தியப்பிரியா, வேளாண்மை அலுவலர் கௌசல்யா, உதவி வேளாண்மை அலுவலர் சந்திரசேகர் மற்றும் அட்மா திட்டம் வட்டார தொழில் நுட்ப மேலாளர் சபரிச்செல்வன், உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் கார்த்திக், தமிழ்மணி ஆகியோர் செய்து இருந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# தேங்காயில் மதிப்புக்கூட்டுதல் தொழில்நுட்பங்கள் குறித்த செயல்விளக்கம்

புதுக்கோட்டை, ஆக.21

புதுக்கோட்டை மாவட்டம், வம்பன், வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தேங்காயில் மதிப்புக்கூட்டுதல் தொழில் நுட்பங்கள் பற்றிய செயல் விளக்கம் தொடர்பான நிலையப் பயிற்சி 20.08.26 அன்று நடைபெற்றது.

இப்பயிற்சியில் வேளாண் அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ம.தமிழ்ச்செல்வன் வரவேற்புரை வழங்கி நிகழ்ச்சியை துவக்கி வைத்து உரையாற்றுகையில் தேங்காய் மதிப்புகூட்டுவதன் மூலம் ஏற்படும் தொழில் வாய்ப்புகளைப் பற்றி விவரித்தார்.

மேலும் தென்னை நார்க்கழிவு உரம் தயாரிக்கும் தொழில் நுட்பங்கள் பற்றி விவரித்தார். முனைவர் செ.ஜேசுப்பிரியா பூர்ணகலா, தொழில்நுட்ப வல்லுநர் (உணவியல் மற்றும் ஊட்டச் சத்தியல்) தேங்காய் பருப்பு, தேங்காய் தண்ணீர் மறறும் இனநீர் ஆகியவற்றிலிருந்து கொப்பரை தேங்காய், ஜாம், ஜெல்லி, தேங்காய் யோகர்ட், நறுமண மூட்டிய பால், தேங்காய் சர்க்கரை, தேங்காய் வெல்லம் மற்றும் உலர வைத்த தேங்காய் தயாரிப்பது பற்றிய பயிற்சி அளித்தார்.

முனைவர். ஜெ. பாலமுருகன், தொழில்நுட்ப வல்லுநர் (மண்ணியல்) தென்னையில் பயிர் ஊட்டம் மற்றும் சரிவிகித பயன்பாடு பற்றி விளக்கினார். இப்பயிற்சியில் 36 தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியினை தொழில் நுட்ப உதலியாளர்கள் கருப்பசாமி மற்றும் தினகரன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.



# தென்னைப் பயிரில் இனக்கவர்ச்சி வாளி குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி



மதுரை, ஆக.21

திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியில் B.Sc. (Hons.) வேளாண்மை இறுதி ஆண்டு பயிலும் மாணவிகள் தாரணி லோகநாதன், தர்ஷினி, கிருஷ்ண பிரியா, கல்கி, அமிர்த கார்த்திகா மற்றும் லாவண்யா ஆகியோர், RAWE (Rural Agricultural Work Experience - கிராமப்புற வேளாண் பணி அனுபவம்) திட்டத்தின் ஒரு பகுதியாக, மதுரை மாவட்டம் அழகாபுரி கிராமத்தில் தென்னைப் பயிரில் இனக்கவர்ச்சி வாளி குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தினர்.

தென்னை சாகுபடியில் மகசூல் மற்றும் மரங்களின் ஆரோக் கியத்தைப் பாதிக்கும் முக்கிய பூச்சிகளில் சிவப்பு கூன்வண்டு (Red Palm Weevil) மற்றும் காண்டாமிருக வண்டு (Rhinoceros Beetle) குறிப்பிடத்தக்கவை. இப்பூச்சிகளின் தாக்குதலை ஆரம்ப நிலை யிலேயே கண்டறிந்து, உரிய ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளைப் பின்பற்றுவது அவசியம் என்பதை விவசாயிகளுக்கு எடுத்துரைக்கும் நோக்கில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியின் போது, விவசாயிகளின் தென்னந்தோப்பில் சுமார் 10 ஆண்டுகள் வயதுடைய தென்னை மரங்களில் சிவப்பு கூன் வண்டின் தாக்குதல் காணப்பட்டது. பாதிக்கப்பட்ட மரங்களில் காணப்படும் துளைகள், துளைகளிலிருந்து வெளியேறும் சாறு மற்றும் நார், இலைகள் வாடுதல் போன்ற ஆரம்ப அறிகுறிகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. அதேபோல், காண்டாமிருக வண்டினால் இளம் குருத்துப் பகுதியில் ஏற்படும் சேதம் மற்றும் விரிந்த இலைகளில் காணப்படும் விசிறி போன்ற வெட்டுக் குறிகளையும் நேரடியாகக் காண்பித்து விளக்கினர்.

**இனக்கவர்ச்சி வாளி செயல்விளக்கம்**

நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக இனக்கவர்ச்சி வாளியின் அமைப்பு, செயல்பாடு, நிறுவும் முறை மற்றும் பராமரிப்பு குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. வாளியில் பயன்படுத்தப்படும் பொருத்த மான கவர்ச்சிப் பொருள் மூலம் இலக்கு பூச்சிகள் ஈர்க்கப்பட்டு

வாளியில் சிக்குகின்றன. இதன் மூலம் தென்னந் தோப்பில் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும், பூச்சிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் ஒருங்கிணைந்த மேலாண்மையில் உதவவும் முடியும் என விளக்கப்பட்டது. மேலும், இனக்கவர்ச்சி வாளியை சரியான இடத்தில் நிறுவுதல், கவர்ச்சிப் பொருளை பரிந்துரைக்கப்பட்ட கால இடைவெளியில் மாற்றுதல் மற்றும் வாளியில் சிக்கிய பூச்சிகளைத் தொடர்ந்து கண்காணித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவமும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப் பட்டது.

## ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை

ஒரு கட்டுப்பாட்டு முறையை மட்டுமே நம்பாமல், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) முறைகளைப் பின்பற்றுமாறு விவசாயி களுக்கு அறிவுறுத்தப்பட்டது. தென்னந்தோப்பில் உலர்ந்த மட்டைகள், அழுகிய மரத்துண்டுகள் மற்றும் பூச்சிகள் இனப் பெருக்கம் செய்யக்கூடிய கழிவுப் பொருட்களை அகற்றி, தோப்பைத் தூய்மையாகப் பராமரிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. மேலும், காயமடைந்த அல்லது வெட்டுக் காயங்கள் ஏற்பட்டுள்ள மரங்களைத் தொடர்ந்து கண்காணித்து, தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், தென்னை மரத்தின் குருத்துப் பகுதியில் தேவையற்ற காயங்கள் ஏற்படாதவாறு கவனமாகப் பராமரிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

தென்னையைப் புதிதாக நடவு செய்யும் போது தரமான மற்றும் ஆரோக்கியமான கன்றுகளைத் தேர்வு செய்தல், பரிந்துரைக்கப்பட்ட நடவு இடைவெளியைப் பின்பற்றுதல், முறையான நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் வசதியை ஏற்படுத்துதல், மண் பரிசோதனை அடிப்படையில் உரமிடுதல் மற்றும் களை மேலாண்மை போன்ற தொகுப்பு தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதன் அவசியமும் எடுத்துரைக்கப்பட்டது. சமச்சீர் ஊட்டச்சத்து மேலாண்மை மூலம் ஆரோக்கியமான மரங்களை உருவாக்கி, பூச்சித் தாக்குதல்களைச் சமாளிக்கும் திறனை மேம்படுத்த முடியும் என்பதும் விளக்கப்பட்டது.


மேலும், தென்னை மரங்களைத் தொடர்ந்து கண்காணித்து, பூச்சித் தாக்குதலின் ஆரம்ப அறிகுறிகளை உடனடியாகக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. குறிப்பாக, சிவப்பு கூன்வண்டு தாக்குதல் காணப்படும் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மரங்களைத் தனியாகக் கண்காணிப்பதுடன், அருகிலுள்ள ஆரோக்கியமான மரங்களிலும் தாக்குதல் ஏற்படுகிறதா என்பதைத் தொடர்ந்து கவனிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சியின் மூலம், விவசாயிகள் இனக்கவர்ச்சி வாளியின் பயன்பாடு, தென்னைப் பூச்சிகளின் ஆரம்ப அறிகுறிகளைக் கண்டறிதல் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை நடவடிக்கைகள் குறித்து நடைமுறை அறிவைப் பெற்றனர்.

இத்தகைய கள அடிப்படையிலான விழிப்புணர்வு நடவடிக்கைகள், தென்னை விவசாயிகள் பூச்சித் தாக்குதலை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, மகசூல் இழப்பையும் பொருளாதார இழப்பையும் குறைத்து, ஆரோக்கியமான தென்னந்தோப்பை பராமரிக்க உதவும்.



# இலக்கியத்தில் நீர் மேலாண்மை - ஒரு பார்வை



பருவநிலை மாறுபாடு போன்ற காரணங்களால் நீர் பற்றாக்குறை நிலவும் இன்றைய கால கட்டத்தில் தான் நாம் அதன் முக்கியத்துவத்தை உணர் கிறோம். ஆனால் சங்க இலக்கியத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாக நீர் மேலாண்மையும் அதனுடைய முக்கியத் துவத்தையும் தெளிவாக பாடல்கள் மூலமாக உரையாக்கப்பட்டுள்ளது என்பது நமக்கு ஆச்சரியமாக இருக்கிற தல்லாவா?அதை பற்றி விரிவாக பார்ப்போம்.

**முந்நீர் விழவு?**

முந்நீர் என்பது மூன்று நீரின் திருவிழா. அது சங்க காலத்தில் நீருக்கான விழாவாகும். முந்நீர் என்பது கடலின் மூன்று முக்கிய செயல்களைக் குறிக்கிறது. மண்ணை உருவாக்குதல், மண்வள காத்தல் மண்ணை அரித்து அழித்தல் (கடல் கோள்) அதனால் தான் மூந்நீர் விழாவாக அமைந்திருக்கிறது.

'நீரின்று அமையாது உலகெனின் யார் யார்க்கும்
வானின்றி அமையாது ஒழுக்கு'
என திருக்குறள் கூறுகிறது.

தண்ணீரைத் தேக்கி வைத்து குமிழி அல்லது மடைகள் வழியாக வெளியேற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியானது, தண்ணீரைக் கட்டுப்படுத்தவும் சமூகத்தை கட்டுப்படுத்தவும் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு பயன்பட்டிருக்க வேண்டும்.

**பரிபாடல் பாடல்**

பரிபாடலில் வைகை ஆறும், சிலம்பில் காவிரி ஆறும் சிறப்பித்து நீர் மேலாண்மை பற்றி கூறப்பட்டுள்ளது.

பண்டைய தமிழர்கள் நீரின் முக்கியத்துவத்தை அறிந்தனர்.

'காடு கொன்று நாடாக்கி குளம் தொட்டு வளம் பெருக்கி' என்ற பட்டினப்பாலை தொடரால் அறிய முடிகிறது.

முறையாக பெய்யும் மழை நீரை ஏரி, குளங்களில், சேமித்து அவற்றை தக்க முறையில் பயன்படுத்தி, நாட்டை வளம் பெறச் செய்பவன் மன்னவன். மழை நீரை சேமித்து வைப்பதற்கு ஏற்ற நீர் நிலைகளை அமைப்பது அரசனின் தலையான கடமை என்பதை புறு நானூறு கூறுகிறது.

**சங்க காலத்தில் கூறப்பட்டுள்ள நீர் நிலைகளின் வகைகள்?**

1) சுனை = மழையில் உருவான நீரூற்று.

2) அருவி = மலை முகட்டில் தண்ணீர் வீழ்வது.

3) ஆழிக்கிணறு = கடலுக்கு அருகே தோண்டிய கிணறு.

4) இலஞ்சி = பலருக்கு பயன்படும் மிகப்பெரிய நீர்நிலை.

5) ஊருணி = மக்கள் பருகும் நீர் நிலை.

6) கண்மாய் = பாண்டிய மண்டலத்தில் ஏரிக்கு வழங்கப்படும் பெயர்.

7) குளம் = ஊரின் நடுவே அமைந்துள்ள நீர்நிலை.

8) கேணி = அகலமும் ஆழமுள்ள பெரிய கிணறு.

9) தாங்கல் = பாசனத்திற்காக நீர் தேக்கி வைக்கும் சிறிய ஏரி போன்ற அமைப்பு.

காலம் காலமாக தமிழ் சமூகம் இயற்கை வளங்களை காப்பதில் நிகறற்று விளங்கிறது. அதைத் தான் பண்டைய இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன. அந்த வழியில் நாமும் நடைபோட்டு நீர் நிலைகளைப் போற்றி பாதுகாத்து எதிர்காலத் தலைமுறையின் நலன் பேணுவோம். நீரின் தேவையறிந்து பயன்படுத்துவோம்.

'நீரின்றி அமையாது உலகு'

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# நெல் சாகுபடியில் நானோ டி.ஏ.பி

சென்னை, ஆக.21

இப்கோ நானோ டி.ஏ.பி என்பது பயிர்களுக்குத் தேவையான நைட்ரஜன் மற்றும் பாஸ்பரஸ் சத்துக்களை வழங்கக்கூடிய ஒரு நவீன திரவ உரமாகும். இதன் ஒரு பாட்டில் (500 மில்லி) வழக்கமான குருணை ஒரு மூட்டை டி.ஏ.பி உரத்திற்கு ஈடானது. நானோ டி.ஏ.பி திரவ உரத்தில் 8% தழைச்சத்தும் 16% மணிச்சத்தும் உள்ளது. நானோ டி.ஏ.பி யைப் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்கையில் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரியத்தன்மை அதிகரிக்கிறது. மேலும், பயிரின் வளர்ச்சி, தரம் மற்றும் மகசூலையும் அதிகரிக்கிறது.

## பயன்படுத்தும் முறை

### விதை நேர்த்தி

ஒரு கிலோ விதைக்கு 5 மி.லி நானோ டி.ஏ.பியைத் தேவையான அளவு நீரில் கலந்து விதையின் மேற்பரப்பில் தெளித்து, 25-30 நிமிடம் நிழலில் உலர்த்தி விதைக்கவும்.




### நாற்று நேர்த்தி

ஒரு லிட்டர் நீரில் 5 மி.லி நானோ டி.ஏ.பியை கலந்து வேர்களை 20 – 30 நிமிடம் ஊறவைத்து, பின் நடவு செய்யவும்.

### இலைவழி தெளிப்பு

### முதல் தெளிப்பு

நடவு செய்த 30-35 நாட்களில் ஒரு ஏக்கருக்கு 500 மி.லி. நானோ டி.ஏ.பி மற்றும் 500 மி.லி. நானோ யூரியா பிளஸ் தெளித்து மேலுரத்தின் தேவையை பூர்த்தி செய்யலாம்.

### இரண்டாம் தெளிப்பு

நடவு செய்த 45-50 நாட்களில் ஒரு ஏக்கருக்கு 500 மி.லி. நானோ டி.ஏ.பி மற்றும் 500 மி.லி. நானோ யூரியா பிளஸ் தெளிக்கவும்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# பண்ணை அமைப்புகளில் டிஜிட்டல் ட்வின் தொழில்நுட்பம்

இன்றைய வேளாண்மை பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகிறது. நீர் பற்றாக்குறை, காலநிலை மாற்றம், மண் வளக் குறைவு, பூச்சி மற்றும் நோய் தாக்குதல், வேளாண் உள்ளீடுகளின் விலை உயர்வு மற்றும் தொழிலாளர் பற்றாக்குறை போன்ற காரணிகள் பயிர் உற்பத்தியைப் பாதிக்கின்றன. எனவே, குறைந்த வளங்களைப் பயன்படுத்தி அதிக உற்பத்தியைப் பெறவும், பண்ணை மேலாண்மையைத் துல்லியமாக மேற்கொள்ளவும் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது அவசியமாகி உள்ளது. செயற்கை நுண்ணறிவு, தொலை உணர்தல், ட்ரோன் மற்றும் துல்லிய வேளாண்மை போன்ற தொழில்நுட்பங்களுடன் தற்போது டிஜிட்டல் ட்வின் தொழில்நுட்பமும் வேளாண்மையில் முக்கியத்துவம் பெற்று வருகிறது.

## டிஜிட்டல் ட்வின் தொழில்நுட்பத்தின் செயல்பாடு

பண்ணையில் பொருத்தப்பட்டுள்ள IoT சென்சார்கள் மூலம் மண் ஈரப்பதம், மண் வெப்பநிலை, காற்றின் வெப்பநிலை, ஈரப்பதம் மற்றும் பிற சுற்றுச்சூழல் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன. இதனுடன் ட்ரோன் மற்றும் செயற்கைக்கோள் படங்கள், வானிலைத் தரவுகள் மற்றும் வேளாண் இயந்திரங்களின் செயல்பாட்டுத் தரவுகளும் பெறப்படுகின்றன. இத்தரவுகள் கிளவுட் கணினி மற்றும் தரவு பகுப் பாய்வு அமைப்புகளுக்கு அனுப்பப்பட்டு, செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் முறைகள் மூலம் பகுப்பாய்வு செய்யப் படுகின்றன.

## இதன் அடிப்படை செயல்முறை

உண்மையான பண்ணை – சென்சார்கள் – தரவு சேகரிப்பு – டிஜிட்டல் ட்வின் – தரவு பகுப்பாய்வு – கணிப்பு – பண்ணை மேலாண்மை முடிவு என அமைகிறது.

## பண்ணை அமைப்புகளில் பயன்பாடுகள்

● டிஜிட்டல் ட்வின் தொழில்நுட்பத்தின் முக்கிய பயன்பாடு பயிர் வளர்ச்சி கண்காணிப்பு ஆகும். பயிரின் வளர்ச்சி எதிர்பார்த்த அளவில் இல்லாவிட்டால், மண் ஈரப்பதம், ஊட்டச்சத்து நிலை, வெப்பநிலை அல்லது நோய் தாக்குதல் போன்ற காரணிகளை கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

● துல்லியமான பாசன மேலாண்மையிலும் டிஜிட்டல் ட்வின் பயன்படுகிறது. மண் ஈரப்பதம், பயிரின் நீர் தேவை, மழைப்பொழிவு மற்றும் வானிலைத் தகவல்களை ஒருங்கிணைத்து எப்போது பாசனம் செய்ய வேண்டும், எவ்வளவு நீர் வழங்க வேண்டும் என்பதை கணிக்க முடியும். இதனால் தேவையற்ற பாசனத்தைத் தவிர்த்து நீரைச் சேமிக்க முடியும்.

● உர மேலாண்மையில், மண் தன்மை மற்றும் பயிரின் வளர்ச்சி நிலையை அடிப்படையாகக் கொண்டு உரத் தேவையை மதிப்பிடலாம். இதனால் அதிகப்படியான உரப் பயன்பாடு குறைந்து, உற்பத்திச் செலவைக் கட்டுப்படுத்த முடியும்.

● பூச்சி மற்றும் நோய் மேலாண்மையிலும் இது பயனுள்ளதாக உள்ளது. வெப்பநிலை, ஈரப்பதம், பயிர் வளர்ச்சி மற்றும் முந்தைய தாக்குதல் தரவுகளைப் பகுப்பாய்வு செய்து பூச்சி அல்லது நோய் தாக்குதலுக்கான சாத்தியத்தை முன்கூட்டியே கணிக்க முடியும். இதன் மூலம் தேவையான நேரத்தில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

● மகசூல் கணிப்புபயிரின் மகசூல் மண், வானிலை, விதைப்பு காலம், பாசனம், உரம் மற்றும் பயிர் வளர்ச்சி போன்ற பல காரணிகளால் பாதிக்கப்படுகிறது. இத்தரவுகளை ஒருங்கிணைத்து பகுப்பாய்வு செய்வதன் மூலம் எதிர்பார்க்கப்படும் மகசூலை டிஜிட்டல் ட்வின் மூலம் கணிக்க முடியும். இதன் மூலம் அறுவடை, சேமிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை விவசாயிகள் முன்கூட்டியே திட்டமிட முடியும்.

## வேளாண் இயந்திரங்களில் பயன்பாடு

டிஜிட்டல் ட்வின் தொழில்நுட்பத்தை டிராக்டர், விதைப்பு இயந்திரம், தெளிப்பான் மற்றும் அறுவடை இயந்திரங்களிலும் பயன்படுத்த முடியும். இயந்திரத்தின் வேகம், எரிபொருள் பயன்பாடு, வேலை நேரம் மற்றும் செயல்திறன் போன்றவற்றைக் கண்காணிக்கலாம். இயந்திரத்தில் கோளாறு ஏற்படுவதற்கு முன்பே அதன் அறிகுறிகளை கண்டறிந்து பராமரிப்பு செய்ய முடிவதால், இயந்திர செயலிழப்பு நேரத்தையும் பராமரிப்புச் செலவையும் குறைக்க முடியும்.

## காலநிலை மாற்ற மேலாண்மை

காலநிலை மாற்றம் வேளாண்மைக்கு முக்கியமான சவாலாக உள்ளது. வறட்சி, அதிக மழை மற்றும் வெப்பநிலை மாற்றம் போன்ற சூழ்நிலைகளின் தாக்கத்தை டிஜிட்டல் ட்வின் மூலம் மெய்நிகர் முறையில் மதிப்பிட முடியும்.

உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட பகுதியில் வறட்சி ஏற்பட்டால் எந்தப் பயிர் சிறப்பாக வளரும், எவ்வளவு பாசனம் தேவைப்படும் மற்றும் மகசூல் எவ்வாறு மாறும் என்பதை முன்கூட்டியே கணிக்க முடியும். இதன் மூலம் காலநிலைக்கு ஏற்ற பயிர் மற்றும் மேலாண்மை முறையைத் தேர்வு செய்யலாம்.

## நன்மைகள் மற்றும் சவால்கள்

டிஜிட்டல் ட்வின் மூலம் நீர், உரம் மற்றும் பிற வேளாண் உள்ளீடுகளை திறமையாகப் பயன்படுத்த முடியும். பயிர் வளர்ச்சியை தொடர்ந்து கண்காணிக்கவும், பூச்சி மற்றும் நோய் தாக்குதலை முன்கூட்டியே அறியவும், மகசூலை கணிக்கவும் முடியும். இதனால் உற்பத்திச் செலவு குறைந்து வளப் பயன்பாட்டுத் திறன் அதிகரிக்கும். இருப்பினும், சென்சார்கள், இணைய வசதி, தரவு சேமிப்பு மற்றும் மென்பொருள் அமைப்புகளுக்கான ஆரம்ப முதலீடு தேவைப்படுவது ஒரு சவாலாகும். சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு தொழில்நுட்பச் செலவு மற்றும் தொழில்நுட்ப அறிவு குறைபாடு தடையாக இருக்கலாம். மேலும், துல்லியமான தரவுகள் கிடைப்பதும் முக்கியமானதாகும். எனவே, குறைந்த செலவிலான தொழில்நுட்பங்கள், உள்ளூர் மொழி செயலிகள் மற்றும் விவசாயிகளுக்கான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

## எதிர்கால வாய்ப்புகள்

எதிர்காலத்தில் டிஜிட்டல் ட்வின் தொழில்நுட்பம் செயற்கை நுண்ணறிவு, ட்ரோன், ரோபோடிக்ஸ் மற்றும் தானியங்கி வேளாண் இயந்திரங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படும் வாய்ப்பு அதிக மாக உள்ளது. இதன் மூலம் விதைப்பு முதல் அறுவடை வரை பண்ணையின் அனைத்து செயல்பாடுகளையும் கண்காணித்து நிர்வகிக்க முடியும். குறிப்பாக விவசாய உற்பத்தியாளர் நிறுவனங்கள், கூட்டுறவு அமைப்புகள் மற்றும் பண்ணை இயந்திர வாடகை மையங்கள் மூலம் இந்தத் தொழில்நுட்பத்தைப் பகிர்ந்து பயன்படுத்தலாம்.

## முடிவுரை

டிஜிட்டல் ட்வின் தொழில்நுட்பம் வேளாண்மையை மேலும் துல்லியமான, திறமையான மற்றும் நிலையான முறையில் மாற்றக் கூடிய நவீன தொழில்நுட்பமாகும். உண்மையான பண்ணையி லிருந்து பெறப்படும் தரவுகளை மெய்நிகர் மாதிரியுடன் இணைப் பதன் மூலம் பண்ணையின் தற்போதைய நிலையை கண்காணித்து எதிர்கால மாற்றங்களை முன்கூட்டியே கணிக்க முடிகிறது. நீர் மற்றும் உர மேலாண்மை, பயிர் வளர்ச்சி கண்காணிப்பு, பூச்சி நோய் மேலாண்மை, மகசூல் கணிப்பு மற்றும் வேளாண் இயந்திர

பராமரிப்பு போன்ற துறைகளில் இது குறிப்பிடத்தக்க பயன்களை வழங்குகிறது. எனவே, குறைந்த வளங்களில் அதிக உற்பத்தி, குறைந்த செலவில் அதிக திறன் மற்றும் தரவின் அடிப்படையில் சரியான முடிவு என்ற நோக்கத்தை அடைய, டிஜிட்டல் ட்வின் தொழில் நுட்பம் எதிர்கால வேளாண்மையின் முக்கிய கருவியாக அமையும்.

கட்டுரை ஆசிரியர் : **Er.S.சுகுமார் M.E., உதவி பேராசிரியர், வேளாண்மைப் பொறியியல் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி. மின்னஞ்சல்: sukumarsubramani2002@gmail.com**





# தோழகிரிப்பட்டியில் ரோஜா பயிருக்கான ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை செயல்விளக்கம்




தஞ்சாவூர், ஆக.21

திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த B.Sc. (ஹானர்ஸ்) வேளாண்மை இறுதியாண்டு மாணவிகள் தனுஷ்யா, கீர்த்தனா, ஜீவிதா, பிரதீபா, அகல்யா மற்றும் ஷப்னா ஆகியோர், தங்களது கிராமப்புற வேளாண் அனுபவப் பயிற்சியின் (RAWE) ஒரு பகுதியாக, தஞ்சாவூர் மாவட்டம் தோழகிரிப்பட்டியில் ரோஜா பயிரில் காணப்படும் பூச்சி களுக்கான ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM – Integrated Pest Management) குறித்த செயல்விளக்கத்தை விவசாயிகளுக்கு வழங்கினர்.

செயல்விளக்கத்தின் போது ரோஜா பயிரைத் தாக்கும் முக்கிய பூச்சிகளான அசுவினி (Aphids), திரிப்ஸ் (Thrips), சிலந்திப் பூச்சி (Spider mites), வெள்ளை ஈ (Whitefly) மற்றும் இலைச்சுருட்டுப் புழு (Leaf roller) போன்றவற்றின் தாக்குதல் அறிகுறிகள் மற்றும் அவற்றை அடையாளம் காணும் முறைகள் குறித்து விளக்கப்பட்டது. மேலும், பூச்சித் தாக்குதலை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து கண் காணித்தல், பாதிக்கப்பட்ட தாவரப் பகுதிகளை அகற்றுதல், வயல் சுகாதாரத்தைப் பராமரித்தல், மஞ்சள் மற்றும் நீல ஒட்டுப்பொறிகள் பயன்படுத்துதல், தேவையான இடங்களில் உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றுதல் போன்ற ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகள் குறித்து செயல்விளக்கத்துடன் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், பூச்சித் தாக்குதல் பொருளாதார சேதநிலையை (ETL) அடையும் போது மட்டுமே பரிந்துரைக்கப்பட்ட பூச்சிக்கொல்லிகளை சரியான அளவில் பயன்படுத்துதல், பூச்சிக்கொல்லிகளை மாற்றி மாற்றிப் பயன்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்றுதல் குறித்தும் மாணவிகள் விளக்கினர். இதன் மூலம் ரோஜா பயிரில் பூச்சிகளை சுற்றுச் சூழலுக்கு பாதுகாப்பான முறையில் கட்டுப்படுத்தி, தரமான மகசூலைப் பெறுவதற்கான ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளை விவசாயிகள் அறிந்து கொண்டனர்.

# பாலவேடு கிராம விவசாயிகளுக்கு மண் வள மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

திருவள்ளூர், ஆக.21

திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் மூலம் அம்பத்தூர் வட்டாரத்தில் உள்ள பாலவேடு கிராமத்தை சார்ந்த 40 விவசாயிகளுக்கு மண் வள மேலாண்மை என்ற தலைப்பின் கீழ் பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சிக்கு வேளாண் அறிவியல் நிலைய முனைவர் சுரேஷ்குமார் மற்றும் வேளாண்மை அலுவலர் நந்தினி, துணை வேளாண்மை அலுவலர் கலாவதி, தலைமை தாங்கி பயிற்சியில் கலந்துகொண்ட அனை வரையும் வரவேற்றி பேசினார் மற்றும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் விற்பனை செய்யப்படும் உயிர் உரங்கள் பற்றியும் வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்து கூறினார், இந்த பயிற்சிக்கு திரூர் குப்பம் வேளாண்மை அறிவியல் நிலையம் முனைவர் சுரேஷ்குமார், பேசுகையில் மண் வள மேலாண்மை என்பது பயிர் விளைச்சலைத் தக்கவைப்ப தற்காக மண்ணின் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பண்புகளைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறது. தமிழ்நாட்டில், செம்மண் மற்றும் கருமண் வகைகள் அதிகமாக இருப்பதால், மண் தரம் குறைவதைத் தடுக்க ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, அங்கக உரங்கள் மற்றும் வழக்கமான மண் பரிசோதனைகள் தேவைப்படுகிறது.

**மண் ஆரோக்கியத்தின் முக்கிய அம்சங்கள்**

1.நல்ல மண் அமைப்பு மற்றும் தளர்வு (புளபொழப்பு தன்மை) காற்று மற்றும் நீர் ஓட்டத்தை அனுமதிக்கிறது.

2.சமச்சீர் ஊட்டச்சத்துக்கள், நச்சுத்தன்மை அல்லது கடுமையான குறைபாடுகளைத் தடுக்கின்றது.

3.நுண்ணுயிரிகள் மற்றும் மண்புழுக்கள் தாவரங்களுக்கு உணவளிக்க கரிமப் பொருட்களை உடைக்கின்றது.

**பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகள்கரிம உரங்களைப் பயன் படுத்தவும்**

1. பண்ணை உரம் (மாட்டு தொழு உரம்) மற்றும் பசுந்தாள் உரம் பயன்படுத்தவும்.

2. அறுவடைக் கழிவுகளை எரிப்பதைத் தவிர்க்கவும் உர செலவு களைச் சேமிக்க அவற்றை உரமாக மாற்றவும்.

3. குறிப்பிட்ட ஊட்டச்சத்து அளவுகளைச் சரிபார்க்க, மன்வள இணையதளம் மற்றும் மண் சுகாதார அட்டைகள் போன்ற திட்டங்களையும் பயன்படுத்தலாம்.

4.மண் நுண்ணுயிரிகளைப் பாதுகாக்க மற்றும் ஈரப்பதத்தைத் தக்கவைக்க கடினமாக உழுவதைக் குறைக்கலாம்.

பசுந்தாள் உரப்பயிர், இயற்கை இடுபொருட்கள் பஞ்சகாவ்யா, ஜீவாமிர்தம், அமிர்தக்கரைசல், மீன் அமினோ அமிலங்கள் மற்றும் பூச்சி விரட்டி தயாரித்தல் குறித்தும் விளக்கி கூறினார். மேலும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சில்வியா இனிகோ பேசுகையில் மண் மாதிரி எடுத்தல் மற்றும் மண் மாதிரியின் முக்கியத்துவம் குறித்தும் விளக்கி கூறினார். இந்த பயிற்சியில் கலந்துக் கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் சிறுண்டி மற்றும் உணவு வழங்கப் பட்டது. உதவி தொழில்நுட்ப மேலாளர் இந்த பயிற்சிக்கு தேவை யான அனைத்து ஏற்பாடுகளையும் உதவி தொழில்நுட்ப மேலாளர் வேல்விழி மற்றும் ஆனைமுத்து செய்தனர்.

# ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த பயிற்சி



சிவகங்கை, ஆக.21

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டாரம் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் 12.08.26 அன்று வேளாண்மைத் துறையின் சார்பில் அட்மா விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த உள்மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடை பெற்றது. இப்பயிற்சியில் வேளாண்மை அலுவலர் (ஓய்வு) குண சேகரன் ஒரே பண்ணையில் பயிர் சாகுபடி, கால்நடை, கோழி, மீன், காய்கறி, பழப்பயிர் போன்ற பல்வேறு வேளாண் தொழில்களை ஒருங்கிணைத்து ஒன்றின் கழிவுகளை மற்றொன்றிற்கு பயன் படுத்தி கூடுதல் வருமானம் மற்றும் நிலையான உற்பத்தி பெறும் முறையே ஒருங்கிணைந்த பண்ணையம் என்பது பற்றிய தொழில் நுட்பங்களை விரிவாக எடுத்துரைத்தார். துணை வேளாண்மை அலுவலர் சுரேஷ், துறை சார்ந்த திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்து உரைத்தார். உதவி விதை அலுவலர் தங்கையா, விதைபண்ணை அமைப்பது குறித்து எடுத்துக்கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சத்யா, அட்மா திட்டடத்தின் செயல்பாடுகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் நந்தினி மற்றும் சண்முகப்பிரியா பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந் தனர். விதை நேர்த்தி செயல்விளக்கம் செய்து காண்பித்தனர். விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# பார்த்தீனியம் களைச்செடி ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி




பெரம்பலூர், ஆக.21

தந்தை ரோவர் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நிறுவனம் சார்பில், பெரம்பலூர் மாவட்டம், எளம்பலூர் கிராமத்தில் விவசாயிகள் மற்றும் பொது மக்களுக்கு பார்த்தீனியம் களைச்செடி ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி 19.08.26 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு ரோவர் கல்விக் குழுமத்தின் மேலாண்மைத் தலைவர் முனைவர் வரதராஜன் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் ஜான் அசோக்குமார் முன்னிலை வகித்தார். கல்லூரியின் முதல்வர் முனைவர் இறைவன் அருட்கனி அய்யநாதன் மற்றும் இயக்குநர் முனைவர் வஹாப் ஆகியோர் கலந்து கொண்டு, பார்த்தீனியம் களைச்செடியின் பாதிப்புகள் மற்றும் அதனைத் தடுக்கும் முறைகள் குறித்து விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு விரிவாக எடுத்துரைத்தனர். நிகழ்ச்சியில் பார்த்தீனியம் களைச் செடியை விதைகள் உருவாகும் முன்பே வேரோடு பிடுங்கி அகற்று வதன் அவசியம் குறித்து விளக்கப்பட்டது. மேலும், களைச்செடியை அகற்றும்போது பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

பார்த்தீனியத்தை எளிதான முறையில் கட்டுப்படுத்த 15 முதல் 20 சதவீத உப்புக் கரைசலை பயன்படுத்துவது குறித்தும் செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. இதற்காக 1 லிட்டர் தண்ணீரில் 150 முதல் 200 கிராம் சமையல் உப்பைக் கலந்து கரைசல் தயாரிப்பது குறித்து விளக்கப்பட்டது. மேலும், பார்த்தீனியம் பூப்பதற்கு முன்பே கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அதன் விதை பரவலைத் தடுக்க முடியும் என எடுத்துரைக்கப்பட்டது. தொடர்ந்து, பார்த்தீனியம் களைச்செடியை அடையாளம் காணுதல், அதன் மூலம் ஏற்படும் பாதிப்புகள், பரவலைத் தடுக்கும் முறைகள் மற்றும் பாதுகாப்பான அகற்றும் வழிமுறைகள் குறித்து விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு செயல்விளக்கம் அளிக்கப் பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் மற்றும் பொது மக்களின் சந்தேகங்களுக்கு உரிய விளக்கங்களும் வழங்கப் பட்டன. இந்நிகழ்ச்சியின் அனைத்து ஏற்பாடுகளையும் கல்லூரியின் நிர்வாக அலுவலர் ஜெயசீலன் மற்றும் அலுவலக மேலாளர் திருநாவுக்கரசு ஆகியோர் சிறப்பாக மேற்கொண்டனர்.

# வேளாண் மகளிருக்கான மாற்று வாழ்வாதாரப் பயிற்சி மற்றும் வேளாண் இடுபொருள் வழங்குதல்



கடலூர், ஆக.21

வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் கோவை மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம் இணைந்து வேளாண் மகளிருக்கான மாற்று வாழ்வாதாரப் பயிற்சி மற்றும் வேளாண் இடுபொருள் வழங்குதல் விழா நடைபெற்றது. இதில் கடலூர் மாவட்ட ஆறு வட்டாரத்தை சேர்ந்த வேளாண் மகளிர் களுக்கு எண்ணெய் பிழியும் மற்றும் மாவு, மசாலா அரைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டு அதனை உபயோகப்படுத்தும் முறை மற்றும் பராமரிக்கும் முறையையும் செயல் விளக்கமாக பயனாளி களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர். க.நடராஜன் மற்றும் முனைவர் ரெ.பாஸ்கரன் மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் இவ்விழாவின் முக்கியத்துவத்தையும் மேலும் எண்ணெய் பிழியும் மற்றும் மாவு, மசாலா அரைக்கும் இயந்திரங்கள் குறித்தும் வலியுறுத்தி வாழ்த்துரை வழங்கினர். முனைவர் சு.கண்ணன், அனைத்து பயிர்களிலும் அறுவடை பின் சார் தொழில்நுட்பங்களும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் பற்றியும் எடுத்துரைத்தார். கடலையில் விதை உற்பத்தி செய்து அதிகம் லாபம் பெற அறிவுருத்தப்பட்டது. காலநிலை மாற்றத்தின் காரணமாக விவசாயிகள் தொழில் முனை வோர்களாக மாற வேண்டிய கட்டாயத்தை வலியுருத்தி இதில் ஒரு பகுதியாக இத் திட்டத்தின் மூலம் வேளாண் சார்ந்த மகளிர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது. மேலும் இத்திட்டத்தில் ADT 51 நெல் விதைகள் பேசிலஸ் போன்ற இடுப்பொருட்கள் விவசாயகளுக்கு வழங்கப்பட்டது.

# நம்ம வயல் செயலில் பயிர் விவரங்களை பதிவு செய்ய அறிவுறுத்தல்

திருவள்ளூர், ஆக.21

'நம்ம வயல்' செயலி மூலம் பயிர் சாகுபடி விவரங்களை பதிவு செய்யும்படி எல்லாபுரம் வேளாண் துறை அதிகாரிகள் விவசாயி களுக்கு அறிவுறுத்தி உள்ளனர். மத்திய–மாநில அரசுகளின் மானிய திட்டங்களை பெறுவதற்கு ஏதுவாக விவசாயிகள் தாங்கள் விளைநிலங்களில் பயிர் சாகுபடி குறித்த விவரங்களை 'நம்ம வயல்'

செயலி மூலம் பதிவேற்றம் செய்து கொள்ளும்படி வேளாண் துறை அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் ஆ.உமா மகேஸ்வரி கூறியதாவது, எல்லாபுரம் வட்டாரத்தில் இரண்டு ஆண்டுகளாக பயிர் சாகுபடி விவரங்களை வேளாண் மற்றும் உழவர் நலத்துறை களப்பணியாளர்கள், வேளாண் கல்லூரி மாணவர்கள் மற்றும் தன்னார்வலர்கள் மூலம் கணக்கெடுக்கப்பட்டு வருகிறது. தற்போது எல்லாபுரம் வட்டாரத்தில் விவசாய நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்கள் குறித்து கணக்கெடுப்பு பணி நடந்து வருகிறது. விவசாயிகள் தங்களுடைய நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர் விவரங்களை தாங்களாகவே ஆண்ட்ராய்ட் மொபைல் போன் மூலம் பதிவு செய்து கொள்வதற்கு ஏதுவாக 'நம்ம வயல்' செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பயிர் கணக்கெடுப்பு பணிகளை விரைவாக முடிக்க முடியும் நடப்பாண்டு பயிர் கணக்கெடுப்பு பணிகளை செப்டம்பர் 30க்குள் முடிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு வேளாண் அலுவலகத்தை தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

